0154

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்**

**சட்டக்கற்கைகள் திணைக்களம்**

**சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் -2022/2023**

**மட்டம் - 04 LLU4708 – அரசியல் அமைப்புச் சட்டம் - II**

**இறுதிப் பரீட்சை 2022 / 2023**

**காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்**

**திகதி : 21 மார்ச் 2024** **நேரம்: மு.ப.9.30 - பி.ப.12.30**

மொத்த வினாக்களின் எண்ணிக்கை எட்டு (08)

ஐந்து (05) வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்குக.

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்

01. அமாணி என்பவள் அரிஸ்ரியாவில் தொழில் திணைக்களத்தில் பணிபுரியும் மேற்பார்வை அலுவலர் ஆவாள். 2023 மார்ச் மாதம் தொழில் திணைக்களம் புதிதாக வெற்றிடமாகிய சிரேஸ்ட மேற்பார்வை அலுவலர்களுக்கான விண்ணப்பங்களை கோரியது. இப்பதவி மேற்பார்வை அலுவலர் பதவியை விட உயர்ந்த மட்டம் ஆகும். தொழில் திணைக்களத்தில் எப்போதுமே ஆண்கள் மாத்திரம் சிரேஸ்ட மேற்பார்வை அலுவலர்களாக பணியாற்றிய வழமை ஒன்று இருந்த போதிலும் அமாணி இவ் உயர்பதவிக்கு தேவையான தகுதிகளை தான் கொண்டிருந்தமையால் அதற்காக விண்ணப்பிக்க தீர்மானித்தாள். தொழில் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ஆட்சேர்ப்புகள் மற்றும் பதவி உயர்வுகளுக்கான ஒழுங்கு விதிகள், உள்ளக ரீதியிலான போட்டிப்பரீட்சை ஒன்றையும் அப்போட்டிப் பரீட்சைகளில் அதிக புள்ளிகளை பெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகத் தேர்வு ஒன்றையும் தேவைப்படுத்தியது. 2023 செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற பரீட்சையில் 05 விண்ணப்பதாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர், அந்த 05 விண்ணப்பதாரிகளில் அமாணியும் ஒருவர் ஆவார். அதனையடுத்து நடைபெற்ற நேர்முகத் தேர்வில் பங்குபற்றிய போது தான் மாத்திரமே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே ஒரு பெண் விண்ணப்பதாரி என்பதை அமாணி உணர்ந்தாள். குறிப்பிட்ட நேர்முக தேர்வு நடாத்தும் குழு ஆண் அலுவலர்களை மாத்திரம் கொண்டிருந்தது. 2023 டிசம்பரில் நடைபெற்ற நேர்முக தேர்வில் அமாணியிடம் சில கேள்விகள் கேட்கப்பட்டன. அக்கேள்விகள் அவளை சஞ்சலத்திற்கு உள்ளாக்கியது. அவற்றில் சில உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- உங்களுடைய குடியியல் அந்தஸ்து என்ன?
- நீங்கள் வெகுவிரைவில் பிள்ளைகளை பெற்றுக்கொள்ள எண்ணியுள்ளீர்களா?
- உங்களுக்கு பிள்ளைகள் இருப்பின் பிரசவ விடுமுறை பெற மாட்டீர்களா? மற்றும் தற்காலிகமாக இப்பதவியை வெற்றிடமாக்க மாட்டீர்களா?
- ஒரு பெண் என்ற அடிப்படையில் சிரேஸ்ட மேற்பார்வை அலுவலர்க்கான பொறுப்புக்களை வினைத்திறனாக பூர்த்தி செய்ய முடியுமென நீங்கள் கருதுகிறீர்களா?
- இந்தப் பதவியை இதற்கு முன்பு எந்த ஒரு பெண்ணும் வகிக்கவில்லை என்பதை தாங்கள் அறிவீர்களா?

2024 ஜனவரியில் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட போது குறிப்பிட்ட பதவிக்கு தான் தெரிவு செய்யப்படவில்லை என்பதை அமாணி அறிந்தாள். தன்னுடைய பால் நிலை காரணமாக அநீதியான வகையில் தன்னை நீக்கியுள்ளார்கள் என அவள் உணர்ந்தாள். உயர்நீதிமன்றத்தின் முன்னிலையில் அடிப்படை உரிமைகள் மனு ஒன்றை தாக்கல் செய்ய உமது ஆலோசனையை நாடுகிறாள். அரிஸ்ரியாவின் அரசியலமைப்பு இலங்கை அரசியலமைப்பை ஒத்ததது எனக் கருதுக. பொருத்தமான அரசியலமைப்பு மற்றும் நீதித்துறை அதிகாரங்கள் என்பனவற்றை குறிப்பிட்டு அமாணிக்கு அறிவுரை வழங்குக.

(20 புள்ளிகள்)

02. டிமன்சியா அரசின் முன்னணி பத்திரிகை நிறுவனங்களில் றிவர் கவுஸ் பப்ளிகேசன்ஸ் ஒரு முன்னணி நிறுவனமாகும். ஜோன் பாஸ் என்பவர் இந்நிறுவனத்தில் இணைந்துள்ள ஒரு ஊடகவியலாளர் ஆவான். நடுத்தர வகுப்பு நகரவாசிகளை மையப்படுத்திய பாரிய வீடமைப்புத் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு உரிமம் ஒன்றை வழங்குவதற்கு அரிஸ்ரியா என்ற அண்டைய நாட்டின் அரிஸ்ரியா கண்ஸ்ரக்சன் லிமிடட் என்ற தனிப்பட்ட கட்டுமான நிறுவனத்துடன் டிமன்சியா அரசு உடன்படிக்கை ஒன்றில் ஈடுபட்டது. இந்த திட்டத்திற்காக டிமன்சியா மாநகர அபிவிருத்தி அதிகார சபையினால் சொந்தம் கொள்ளப்பட்ட டிமன்சியாவின் தலைநகரில் உள்ள ஒரு பாரிய வெற்று நிலப்பகுதி தெரிவு செய்யப்பட்டதற்கு உத்தேசிக்கப்பட்டதுடன் இப்பகுதி குறிப்பிட்ட நகரத்தின் குடியிருப்பாளர்களால் பல தசாப்தங்களாக விளையாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலே குறிப்பிட்ட உடன்படிக்கை கைச்சாத்திட்டமையை அறிந்த ஜோன் பாஸ் இவ்விடயம் பொதுமக்கள் அக்கறையுடன் தொடர்புபட்டு இருப்பதால் அவ்வுடன்படிக்கை தொடர்பான தகவல்களை பெற ஆர்வம் கொண்டான். உடன்படிக்கை பற்றி விசாரித்த போது இத்திட்டம் தொடர்பான ஏதேனும் தகவல்களை வெளியிடுவதானது சர்வதேச பொருளாதார உறவுகளுக்கு பங்கம் ஏற்படுத்தும் என்ற அடிப்படையில் தகவல்களை மாநகர அபிவிருத்தி அதிகார சபை வெளிப்படுத்த மறுத்தது. இவ்வாறு தகவல்களை வெளிப்படுத்த தவறியமை தமது உரிமையை மீறியதாக ஜோன் பாஸ் கருதுகிறான் டிமன்சியாவின் அரசியலமைப்பு இலங்கை அரசியலமைப்பை ஒத்தது எனக் கருதுக. அரசியலமைப்பு உரிமைகள் சட்டவியலின் கீழ், வழக்கிடு தகைமை தொடர்பான விதிகளின் பின்னணியில் ஜோன் பாஸ் அடிப்படை உரிமைகள் மனு ஒன்றை எந்த காரணிகள் மீது தாக்கல் செய்ய முடியும் என்பதை ஆராய்க.

(20 புள்ளிகள்)

03. ' "பிரசுரம் உள்ளடங்கலாக பேச்சு மற்றும் கருத்து வெளியிடல் சுதந்திரம்" போன்ற கோட்பாடுகள் அரசியலமைப்பு ரீதியாக வேரூன்றி உள்ள அடிப்படை உரிமைகள் என்ற எடுத்துரைப்புகளுக்குள் இருந்து உருவாக்கப்படுவதால் அவை அரசியலமைப்பில் அடிப்பாறையான ஜனநாயகம் மற்றும் சட்டவாட்சி ஆகிய அடிப்படை எண்ணக்கருக்களின் பின்னணியில் பரந்துபட்ட அடிப்படையில் பொருட்கோடல் செய்யப்பட வேண்டும்.'

- *Fernand J. in Karunathilaka and another v. Dayananda Dissanayake (1999) 1 SLR 157 at 173*

அரசியலமைப்பின உறுப்புரை 14 (1) (அ) இனை பொருட்கோடல் செய்கையில் இலங்கை நீதித்துறை கையாளுகின்ற அணுகுமுறையில் மேலே தரப்பட்ட கூற்று சரியாக பிரதிலிக்கிறதா, என நீர் கருதுகறீரா? பொருத்தமான தீர்ப்புச்சட்டங்களுடன் தொடர்புறுத்தி விமர்சித்து ஆராய்க.

(20 புள்ளிகள்)

04. தமாலி என்ற அரசினுடைய அரசாங்கம் நாட்டில் போதைவஸ்துக்களை இல்லாமலாக்கும் இலக்கினைக் கொண்ட ஒரு விசேட பொலிஸ் அதிரடி நடவடிக்கையினை பிரகடனப்படுத்தியது. அஹ்ராணாஜ் என்பவன் தமாலியின் தலைநகரில் வசித்து வருகின்ற 30 வயதான முச்சக்கர வண்டி சாரதி ஆவான். அஹ்ராணாஜ் கடந்த காலப்பகுதிகளில் போதைவஸ்த்துடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டுக்கள் உள்ளடங்கலாக சிறு குற்றங்களுக்காக கட்டுக்காவலில் இருந்தமைக்கான பதிவுகள் இருந்தன. ஒரு நாள் இரவு 11.30 மணியளவில் அண்மையில் இருந்த பொலிஸ் சாவடி அருகில் அவனுடைய முச்சக்கரவண்டி நிறுத்தப்பட்டது பொலிஸார் அவனுடைய முச்சக்கர வண்டியையும் ஆவணங்களையும் பரீட்சித்தனர். அனைத்து ஆவணங்களும் ஒழுங்காக இருந்தது. மேலும் முச்சக்கரவண்டிக்குள் சந்தேகத்திற்கிடமான பொருள் எதுவும் இருப்பதை பற்றி பொலிஸாருக்கு சந்தேகமும் ஏற்படவில்லை எனினும் கடமையில் இருந்த பொலிஸார் அஹ்ராணாஜை அவர்களுடன் பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு வேண்டினர் அக்கட்டளையை அஹ்ராணாஜ் மறுத்த போது கடமையில் இருந்த ஒரு பொலிஸ் அலுவலர் அவனை அச்சுறுத்தி பின்வருமாறு குறிப்பிட்டார்.

> … ' உன்னுடைய தோற்றம் சந்தேகத்திடமான நபர் என்பதை காட்டுகிறது. சேரிப்புறங்களில் வசிக்கின்ற மக்களை பற்றி எமக்குத் தெரியும், விசேடமாக உன்னையும் உனது குழுவையும் பற்றி. ஏந்த பிரச்சினையையும் தோற்றுவிக்காது எங்களுடன் வா, அல்லாவிடில் நீ விளைவுகளை சந்திக்க நேரிடும்.'

அஹ்ராணாஜ் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரவு முழுவதும் பொலிஸ் நிலையக் கட்டுக்காவலில் வைக்கப்பட்டான். காலை 5.00 மணியளவலில் அடைக்கப்பட்ட அறையில் இருந்து அவனை பக்கத்தில் இருக்கின்ற அறை ஒன்றிற்கு சிவில் உடையில் இருந்த சில பொலிஸார் எடுத்துச் சென்றனர். அந்த அறையில் அவனை கீழே குனிந்து மேலே எழும்புமாறு கேட்கப்பட்டான். அவன் ஒவ்வொரு முறையும் கீழே குனிந்து மேலே எழும்பும் போது அங்கிருந்த ஆட்கள் கன்னத்தில் அறைந்ததுடன் முகத்தில் குத்தினர். ஏறக்குறைய 15 நிமிடங்கள் வரை இவ்வாறு தாக்கப்பட்டான் அதன் பின்பு மீண்டும் அடைத்து வைக்கப்பட்ட அறைக்கு எடுத்துச் செல்லப்பட்டான். காலையில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அவனை அழைத்து அவனை வெளியேறுமாறு அறிவித்தார். அப்போது அவர் சட்ட அமுலாக்க அலுவலர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என அறிவுரை வழங்கியதுடன், பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி கட்டுக்காவலில் இருந்த போது நடந்த விடயங்களை வெளிப்படுத்த வேண்டாம் எனக் கூறினார். அஹ்ராணாஜ் வீட்டை அடைந்த பின்பு அவனுடைய உடல் முழுவதும் காயங்கள் இருப்பதை அவனுடைய மனைவி அவதானித்தாள். என்ன நடந்தது என்பதை அவள் கேட்டறிந்த பின்பு வைத்திய சாலையில் அனுமதி பெறுமாறு அவனை வேண்டினாள் மேலும் பொலிஸாருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அவள் எண்ணுகிறாள்.

அஹ்ராணாஜ் உடைய சட்டத்தரணியென உம்மை கருதுக. அஹ்ராணாஜ் எந்த அடிப்படைகளின் மீது ஒரு அடிப்படை மனுவை தாக்கல் செய்ய முடியும் என்பதை ஆராய்க. மேலும் அஹ்ராணாஜ் உடைய மனைவி தனது கணவன் சார்பாக மனுவை தாக்கல் செய்ய முடியுமா என்பதையும் ஆராய்க.

(20 புள்ளிகள்)

05. அ) வருடாந்த தேசிய சட்ட மாணவர்கள் மகாநாட்டில் " அரசியலமைப்பு அபிமாணியம் மற்றும் அதனுடைய ஒப்பீட்டு பயன்பாடுகள்" என்ற தலைப்பில் சொற்பொழிவொன்றை ஆற்றுவதற்கு உம்மை அழைத்துள்ளனர் எனக் கருதுக. நீர் அரசியலமைப்பு அபிமாணியம் என்ற கோட்பாடு பற்றி இரண்டு (02) ஒப்பீட்டு நியாயாதிக்கங்களை கொண்டு விளக்குமாறு எதிர்பார்க்கப்படுகின்றீர். சொற்பொழிவுக்கான வரைபொன்றினை தயாரிக்குக.

(12 புள்ளிகள்)

ஆ) அரசியலமைப்பு அபிமாணியம் மற்றும் அதிகார பகிர்வு என்பவற்றுக்கிடையிலாக தொடர்பினை நீர் எவ்வாறு விளக்குவீர்? பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

(12 + 08 = 20 புள்ளிகள்)

06. "இலங்கையின் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் ஒரு மாகாணசபை அடிப்படையிலான அரசாங்கத்தை உருவாக்கி அதிகார பகிர்வு முறைமை ஒன்றை ஸ்தாபித்துள்ளது. எனினும் ஆழமான அதிகார பகிர்வில் அக்கறை கொண்டவர்கள் மாகாண சபைகளின் சுய அதிகாரங்களை மட்டுப்படுத்துகின்ற திருத்தத்தில் உள்ள சில விடயங்கள் மீது விமர்சனங்களை கொண்டுள்ளனர்."

இலங்கையின் மாகாணசபைகளில் உள்ள இரண்டு (02) குறைபாடுகளை குறிப்பிட்டு மேலே தரப்பட்ட கூற்றினை ஆராய்க. நீர் இனங்கண்ட பிரச்சினைகளுக்கு சாத்தியமான தீர்வுகள் தொடர்பான பரிந்துரைகளை முன்வைக்குக.

(20 புள்ளிகள்)

07. அ) அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் என்ற வழக்கில் இலங்கையின் உயர் நீதிமன்றம் " ஒற்றையாட்சி" மற்றும் " சமஷ்டி ஆட்சி" என்பவற்றை எவ்வாறு பொருட்கோடல் செய்தது என்பதை விளக்குக. 13ஆவது திருத்த சட்டம் ஒற்றையாட்சி அரசு என்ற வரையறைக்குள் உள்ளது என்ற முடிவுக்கு வருவதற்கு இவ்வரைவிலக்கணங்கள் எவ்வாறு பிரயோகிக்கிப்பட்டன.

(12 புள்ளிகள்)

ஆ) மேலே குறிப்பிட்ட சமஷ்டி அரசுகள் மற்றும் ஒற்றை ஆட்சி அரசுகள் என்பவற்றுக்கு இடையிலுள்ள வேறுபாடுகளின் பின்னணியில் (அ) சமஷ்டி அரசியலமைப்பு கட்டளை மற்றும் (ஆ) ஒற்றையாட்சி அரசு கட்டமைப்புக்குள் அதிகார பகிர்வு மாதிரி என்பவற்றை பிரதிபலிக்கின்ற இரண்டு வெளிநாட்டு நியாயாதிக்கங்களை நீர் விரும்பிய அடிப்படையில் தெரிவுசெய்து அவற்றில் உள்ள அடிப்படை அம்சங்களை ஆராய்க.

(08 புள்ளிகள்)

(12 + 08 = 20 புள்ளிகள்)

08. பின்வருவன தொடர்பில் சிறுகுறிப்பு எழுதுக.

அ) மாகாண பகிரங்க சேவை.

ஆ) அதிகார பரவலாக்கம் மற்றும் அதிகார பகிர்வு.

இ) ஒருங்கிணை அட்டவணை.

ஈ) 13ஆவது திருத்தங்களின் கீழ் ஆளுநரின் வகிபாகம்.

(05 x 04 = 20 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமையுடையது -